

நாகை மாவட்டம் நாகை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் நாகை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லாவை ஆதரித்து நாகையில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ திறந்த வேனில் பிரச்சாரம் செய்தார் நாகை மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.



ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் சு.முத்துசாமி சூரம்பட்டி பகுதியில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்து கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மீனா ஜெயக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளருமான நிவேதா எம்.முருகன் ஆறுபாதி ஊராட்சியில் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரித்தார். உடன் மாநில விவசாய அணி இணை செயலாளர் ஆர்.அருள்செல்வம், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம். ஸ்ரீதர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி.என். விஜயபாலன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜ.என்.ரவி, மாவட்ட கழக துணை செயலாளர் மு.ஞானவேல், செம்பனார்கோவில் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எம்.அன்பழகன் மற்றும் பலர் உள்ளனர்.






புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை சட்டமன்றத் தொகுதி, விராலிமலை மத்திய ஒன்றியம் தென்னம்பாடியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் நமது வெற்றி சின்னமாம் உதய சூரியனுக்கு, பொதுமக்களை நேரில் சந்தித்து வாக்குச் சேகரித்தார். நிகழ்வில் விராலிமலை மத்திய ஒன்றியச் செயலாளர் கே.பி.அய்யப்பன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் உள்ளனர்.



திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின், தி.மு.கழக வெற்றி வேட்பாளர் உயர்கல்வித்துறை முனைவர் கோவி.செழியன், திருமங்கலக்குடி ஊராட்சியில் உள்ள இஸ்லாமிய பள்ளிவாசலில், இஸ்லாமிய சகோதரர்களை நேரில் சந்தித்து சிறுபான்மையின மக்களின் உரிமைகளை காக்கும் தி.மு.கவின் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு கேட்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், ஒன்றியச் செயலாளர் சுந்தர.ஜெயபால், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.கே.எம்.ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளனர்.



காங்கேயம் சட்டமன்ற தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட நாச்சிபாளையம், பச்சபாளி, கரட்டுப்பாளையம், பெரியசாமி நகர், செம்மாண்டம்பாளையம், கிறிஸ்துவதெரு, ராஜீவ் நகர் உள்ளிட்ட பகுதிகளில் “உதயசூரியன்” சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் திருப்பூர் கிழக்கு மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர். முத்துக்குமார், நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்ற தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர் டாக்டர் டி.இந்திராணிக்கு ஆதரவாக திருப்பூர் கிழக்கு மாவட்டம், மூலனூர் மேற்கு ஒன்றியம், எரசினம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் “உதய சூரியன்” சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் இதில் ஒன்றிய கழகச் செயலாளர் ப.பழனிச்சாமி உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின், தி.மு.கழக வேட்பாளர் ந.தினேஷ்குமார் கருவம்பாளையம் பகுதி கழகத்திற்குட்பட்ட அணைப்பாளையம் பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சூளகிரி ஒன்றியத்தில் உள்ள 30 க்கும் மேற்பட்ட கிராமங்களில் வேப்பனஹள்ளி வேட்பாளர் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் சீனிவாசன் தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் தலைமையிலான திராவிடமாடல் ஆட்சியில் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தில் உள்ள கடைக்கோடி மக்களும் பயன்பெறும் வகையில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி இருக்கிறார். என வாக்கு சேகரித்தார் அப்போது உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஒன்றிய செயலாளர் பாக்யராஜ் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் உடன் இருந்தனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஏற்காடு சட்டமன்ற தொகுதி அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளில் தெற்கு ஒன்றிய திமுக செயலாளரும், முன்னாள் ஒன்றிய குழு தலைவருமான ஏ. விஜயகுமார் வீடு வீடாகச் சென்று கழக அரசின் சாதனைகளை சொல்லி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அப்போது தி.மு.க. நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.